**22 | T | I**

# "GEO" Published

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2020 ஆவணி**

**General Certificate of Education (Adv. Level) Examination, August – 2020**

## முன்னோடிப் பரீட்சை –02

| | | |
|---|---|---|
| புவியியல் - I<br>Geography - I | *Teacher:-*<br>*M.Sujinthan, BA(Hons) Spl.Geo* | மூன்று மணித்தியாலங்கள்<br>Three Hours |

அறிவுறுத்தல்கள்:-

- * இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது. பகுதி **I, 40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி **I** இற்கான விடைகள் **இவ்வினாத்தாளிலேயே** எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வழங்கப்படும்.
- * பகுதி **II** இல் உள்ள வினாக்கள் **இரண்டிற்கும்** விடையளித்தல் வேண்டும். பகுதி **III** இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டிற்கு** விடையளித்தல் வேண்டும்.
- * இப்பத்திரத்திலுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி, உலக புறவுருவப்படம் என்பன வழங்கப்படும்.
- * இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக, இலங்கையின் *1:50000* அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும், உலகப் புறவுருவப் படமும், வரைபுத்தாள் ஒன்றும் வழங்கப்படும்.

## பகுதி *I*


* **ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தினைப் புள்ளிகோட்டில் எழுதுக.**

***1.*** ***1:50000*** அளவுத்திட்டத்தில் அமைந்த இலங்கையின் இடவிளக்கப்படத்தில் காட்டப்படும் ***9cmx8cm*** நெல் வயல் பரப்பின் உண்மையான பகுதியைக் காட்டும் சரியான விடை எது?
1) ***16.5Km$^2$*** 2) ***14.5Km$^2$*** 3) ***10.0Km$^2$*** 4) ***18Km$^2$*** 5) ***72Km$^2$*** ***(............)***

***2.*** தாழ்சமவுயரக்கோடுகள் **நெருக்கமாகவும்**, உயர்சமவுயரக்கோடுகள் **ஐதாகவும்** அமைவதால் காட்டப்படும் சாய்வு ?
1) மென்சாய்வு 2)குவிவுச்சாய்வு 3)குழிவுச்சாய்வு 4)குத்துச்சாய்வு 5)சரிவுச்சாய்வு ***(............)***

***3.*** இலங்கையில் *1:50,000* தேசப்படத்தை தயாரிப்பதற்காகன **அழியடைப்பை** அமைப்பதற்கு மத்திய புள்ளியாக தெரிவுசெய்யப்பட்ட மலைத் தொடர் யாது?
1) நக்கிள்ஸ் மலைத்தொடர் 2) சிகிரியாக் குன்று 3) கிரிகல்பொத்த மலை
4) ரித்திகல மலை 5) பீதுறுதாலகால மலை ***(............)***

**4.** பின்வரும் ***A,B*** மற்றும் ***C*** வரைபடங்களில் உள்ளவற்றைச் சரியான ஒழுங்கில் காட்டும் விடை எது?




1) சரிவுப்பாறை, சுவடு, குவிவுச்சாய்வு
2) இடைவெளி,பள்ளத்தாக்கு, குழிவுச்சாய்வு
3) குழிவுச்சாய்வு, சுவடு, குவிவுச்சாய்வு
4) இடைவெளி, சுவடு, குவிவுச்சாய்வு
5) சுவடு, இடைவெளி, குழிவுச்சாய்வு (............)

**5.** பூகோள இடநிர்ணய முறைமையில் இட அமைவினை அறிவதற்கு ***24*** செய்மதிகள் பூமியை வலம் வருகின்றன. இடவமைவின் துல்லியத் தன்மையைச் சிறப்பாக காட்டுவதற்கு இசசெயம்தியின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளது. அதன் எண்ணிக்கை யாது?

1) ***26*** 2) ***35*** 3) ***34*** 4) ***30*** 5) ***25*** (............)

**6.** பின்வரும் விடைகளுள் எது? **தொலையுணர்வில்** பயன்படுத்தப்படும் மூன்று மேடைகளைச் சரியாகக் காட்டுகின்றது.
1) கோபுரம், விமானம், செய்மதி
2) மோட்டார் வாகனம், செய்மதி, பலூன்
3) பலூன், பாரந்தூக்கி, செய்மதி
4) கோபுரம், மோட்டார் வாகனம், செய்மதி
5) செய்மதி, பலூன், விமானம் (............)

**7.** புவியியல் தகவல் முறைமையில் **இடஞ்சார்ந்த தரவுகளுக்கான** இரண்டு உதாரணங்களைக் கொண்டிருக்கும் சரியான விடை எது?
1) நிர்வாகப்பிரிவு, பிரதேச சனத்தொகை
2) பியிரிடப்படும் நிலம், அதிவேகப்பாதையின் நீளம்
3) நிலப்பகுதி ,நகரங்கள்
4) நிர்வாகப்பிரிவு, அதிவேகப்பாதைகள்
5) ஆறுகள் , வீதிகளின் நீளம் (............)

**8.** முனைவுச் சுற்றுப்பாதைச் செய்மதிகள் **வடமுனைவு, தென்முனைவுகளிற்கு** மேலாக அண்ணளவாக எத்தனை ***Km*** தூரத்தில் பயணம் செய்கிறது?
1) ***300-1200Km*** 2) ***200-1000Km*** ***3) 500-1500Km*** ***4)600-2000Km***
5) ***350-1050Km*** (............)

**9.** தொடரச்சியான தரவுகளுக்குரிய **மூன்று** மாறிகளாவன?
1) மழை வீழ்ச்சி, பாடசாலை வரவுப் பதிவேடு, சனத்தொகை அடர்த்தி
2) தாவரங்களின் வளர்ச்சி, நாளாந்த வெப்பநிலை, திசுக்களின் நிறை
3) காட்டு நிலபப்குதி, பராமரிக்கப்பட்ட நோயாளரின் எண்ணிக்கை , மண் ஈரப்பதன்
4) புரத நுகர்வு, ஆவியாக்கம், தொழிலாளர் எண்ணிக்கை
5) வீதி விபத்துக்கள், சுற்றலாப் பயணிகளின் வருகை, ஏற்றுமதி வருமானம் (............)

M.SUJINTHAN

***10.*** பின்வருவனவற்றுள் தரவு சேகரிப்பு முறை **அல்லாதது** எது?

1) அவதானிப்பு  2) உரையாற்றுதல்  3) வினாக்கொத்து
4) அளவை  5) மாதிரிகள்  (............)

***11.*** தரவுத் தொடரொன்றின் **மையப்போக்கினை** எடுத்துக்காட்டும் அளவை?

1) மேற்காலணை  2) கீழ்காலணை  3) இடை
4) வீச்சு  5) நியவிலகல்  (............)

***12.*** றைன் கிழக்கு ஆபிரிகாவின் **விக்டோரியா ஏரி, தங்கனிக்கா ஏரி** என்பன?

1) மடிப்பு மலைகள்  2) *"U"* வடிவப் பள்ளத்தாக்குகள்
3) பிளவுப்பள்ளத்தாக்குகள்  4) கழிமுகங்கள்
5) மேற்கூறிய எதுவுமில்லை  (............)

***13.*** **வில்பத்து** தேசிய பூங்கா பரந்திருக்கும் மாவட்டங்கள்?

1) புத்தளம், அனுராதபுரம், வவுனியா  2) வவுனியா, அனுராதபுரம், மன்னார்
3) மன்னார், அனுராதபுரம், புத்தளம்  4) அம்பாந்தோட்டையும் மன்னாரும்
5) அனுராதபுரம், வவுனியா, பொலநறுவை  (............)

***14.*** பின்வருவனவற்றுள் எக்கூற்று **"அனர்த்த முகாமைத்துவம்"** என்ற பதத்தினை சரியான முறையில் வரைவிலக்கணப்படுத்துகின்றது?

1) குடியெழுப்பி வெளியேற்றம் மற்றும் தற்காலிக வதிவிடம் என்பவற்றிற்காகத் திட்டமிடல்
2) வெளிநாட்டு உதவிகள் மற்றும் நன்கொடைகள் என்பவற்றை ஒருங்கிணைத்தல்.
3) அனர்த்தத்திற்கு முன்னை, அனர்த்தத்திற்கு பிந்திய நடவடிக்கைகளை திட்டமிடல்.
4) சுகாதார மற்றும் ஊடடச்சத்து நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
5) அனர்த்தங்கள் பற்றி அறிந்து கொள்ளுதல்.  (............)

***15.*** வடபசுபிக்கின் **மேற்குப் பகுதிகளிலும் சீனக் கடலிலும்** ஏற்படும் அயனச் சூறாவளிகளைக் குறிப்பிடுவது?

1) ரொனாடா (சூறைப்புயல்)  2) இடிமின்னற் புயல்
3) தைபூன்  4) ஹரிக்கேன் (பெரும்புயல்)
5) வில்லிவில்லிஸ்  (............)

***16.*** **தென்மேற்கு பருவக்காற்று மழையின்** காற்றொதுக்குப் பக்கமாவது இலங்கையில் அமைவது?

1) மத்திய மலைநாட்டின் மேற்பகுதி  2) மத்தியமலைநாட்டின் தென்மேற்குப்பகுதி
3) மத்தியமலைநாட்டின் வடமேற்குப்பகுதி  4) மத்திய மலைநாட்டின் தென்பகுதி
5) மத்திய மலைநாட்டின் வடகிழக்குப் பகுதி  (............)

***17.*** ஆற்றுப் பள்ளத்தாக்கொன்றில் காணப்படும் மூன்று **இடவிளக்கவியல்** அம்சங்கள்?

1) வெள்ளச் சமவெளி, கழிமுகம் மற்றும் பனியொருத்தேரிகள்
2) வண்டல் விசிறிகள், கழிமுகம் மற்றும் பானைக் குழிவுகள்
3) உயரணைகள், பனியொருத்தேரிகள் மற்றும் யார்டாங்கு
4) பின்னலருவி, வெள்ளச்சமவெளி மற்றும் தளத்திடைக்குன்றுகள்
5) மியாந்தர்கள், பனியொருத்தேரிகள் மற்றும் பகாடாஸ்  (............)



M.SUJINTHAN

***18.*** பசோல்ட் பாறைகளை அதிகம் கொண்டிருக்கும் **புவியின் கட்டமைப்பு** பகுதி யாது?
1) சீயல் படை 2) சீமாப் படை 3) மேல் இடையோடு
4) கீழ் இடையோடு 5) வெளிக்கோளவகம் ***(............)***

***19.*** பின்வரும் விடைகளுள் எது குடியிருப்பு முறைமையொன்றில் படிமுறை ஒழுங்கில் மிகத் **தாழ்மட்டத்திலுள்ள** குடியிருப்பினைச்சரியாகக் காட்டுகின்றது?
1)நகரம் 2. குக்கிராமம் 3. கிராமம் 4. உபநகரப்பகுதி 5. பண்ணை நிலம் ***(............)***

***20.*** பின்வரும் தெரிவுகளில் எது இலங்கையின் **முதலீட்டு ஊக்குவிப்பு** வலயங்களின் மூன்று அமைவிடங்களைச்சரியாகக் காட்டுகின்றது?
1) கட்டுநாயக்கா, அவிசாவளை மற்றும் பியகம
2) பியகம, கட்டுநாயக்கா, மற்றும் ஹொதணை
3) ஏக்கல, அவிசாவளை மற்றும் ஹொரணை
4) அவிசாவளை, பியகம மற்றும் ஹொரணை
5) கட்டுநாயக்கா, கொக்கல மற்றும் பியகம ***(............)***

***21.*** கெப்பனின் காலநிலைப்பாகுபாட்டில் ***"AF"*** வகையைச் சேர்ந்த பகுதி எது?
1) புளோறிடா 2) பிறேயறிஸ் புல்நிலங்கள் 3) சக்கிரமன்ரோ பள்ளத்தாக்கு
4) கொங்கோ வடிநிலம் 5) குயின்ஸ்லாந்து ***(............)***

***22.*** இயற்கைப் பாதுகாப்பிற்கான சர்வதேசச் சங்கத்தின் ***(IUCN)*** **தற்காலிக தலைமையகம்** அமைந்துள்ள நாடும் நகரமும்
(1) சுவிஸ்லாந்து - கிளோணட் (2) இலங்கை - பத்தரமுலல் (3) பிரித்தானியா - லண்டன்
(4) ஐக்கியஅமெரிகக்கா - பொஸ்டன் (5) இந்தியா - மும்பாய் ***(............)***

***23.*** பின்வருவனவற்றில் எது கண்டப்பனிக்கட்டியாறுகளினால் உருவாக்கப்படும் இரண்டு **படிவிற்குரிய** நிலவுருவங்களைச் சரியாகத் தருகின்றது.
1) குத்துப்பாறை வாற்குன்று மற்றும் வட்டக்குகை
2) நீள்மணற்குன்று மற்றும் படிவுத்திட்டை
3) குத்துப்பாறை வாற்குன்று மற்றும் கூர்முடி
4) செம்மறியுருப்பாறை மற்றும் வட்டக்குகை
5) கூர்முடி மற்றும் செம்மறியுருப்பாறை ***(............)***

***24.*** இலங்கையின் கனியமணலில் காணப்படும் முக்கிய **இரசாயன மூலக்கூறாக** அமையாதது?
1) யுரேனியம் 2) டைட்டானியம் 3)தோரியம்
4) டங்ஸ்டன் 5) சேர்கோனியம் ***(............)***

***25.*** **எல்-நினோ** தோற்றப்பாடு நிகழ்வதற்கான காரணம் யாது?
1) இந்து சமுத்திரத்தின் வெப்பநிலையில் சடுதியான வீழ்ச்சி
2) பசிபிக் சமுத்திரத்தின் வெப்பநிலையில் படிப்படியான வீழ்ச்சி
3) அத்திலாந்திக் சமுத்திரத்தின் வெப்பநிலையில் படிப்படியான அதிகரிப்பு
4) பசிபிக் சமுத்திரத்தின் வெப்பநிலையில் சடுதியான அதிகரிப்பு
5) இந்து சமுத்திரத்தின் வெப்பநிலையில் படிப்படியான அதிகரிப்பு ***(............)***

M.SUJINTHAN

**26.** அகன்ற அடித்தளத்தைக் கொண்ட ஒரு குடித்தொகைக் கூம்பில் வயதுப் பிரிவுகளின் மேல்நோக்கிய நகர்வின் போது ஏற்படும் குறுகிய நிலையானது குடித்தொகையில் எதனைக் குறித்துக் காட்டுகின்றது?
1) விரைவான வீழ்ச்சி
2) விரைவான அதிகரிப்பு
3) மெதுவான வீழ்ச்சி
4) தற்போதைய மட்டத்தில் உறுதியான நிலை
5) உத்தம மட்டமொன்றினை அடைதல் (............)

**27.** உலக சனத்தொகையின் **வளர்முக நாடுகளின்** தற்பொழுது வளர்கின்ற சனத்தொகையின் அண்ணளவான சதவிகிதம் யாது?
1. 75% 2. 35% 3. 40% 4. 50% 5. 80% (............)

**28.** பின்வரும் விடைகளில் எது **சேவைத்துறையொன்றின்** பொருளாதார நடவடிக்கைகளைக் காட்டுகின்றது?
1) கைவினைப் பொருட்கை செய்பவராகத் தொழில் புரிதல்
2) பேரூந்து ஓட்டுனராகத் தொழில் புரிதல்
3) மீனை தகரத்தில் அடைக்கும் கைத்தொழிலில் தொழில் புரிதல்
4) இரும்பு மற்றும் உருக்கு ஆலையில் தொழிலாளியாகப்பணிபுரிதல்
5) பயிர்செய்கைக்காக நிலத்தினைத் தயார்படுத்தும் விவசாயியாகத் தொழில் புரிதல்
(............)

**29**. மகாவலி பிரதேசத்தில் அமைந்துள்ள **திட்டமிடப்பட்ட** குடியிருப்புக்கள்?
1) குக்கிராமம் 2) கிராம மததிய நிலையம்
3) பிரதேச மத்திய நிலையம் 4) நகரமத்திய நிலையம் (............)
5) யாவும் சரி

**30.** இயற்கை வட்டத்திற்கும் உயிரின விஞ்ஞான செயற்பாட்டிற்கு ஏதுவான செயன்முறையைத் கொண்ட **விவசாயத் தொழில்நுட்பம்** யாது?
1) மரபணுத் தொழில்நுட்பம்
2) இழையவளர்ப்பு
3) கலப்பாக்கம்
4) சேதன விவசாயம்
5) பசுமைப்புரட்சி (............)

**31. "எக்ஸ்ரவெட்" *(Extranet)*** எனப்படுவது யாது?
1) நிறவனமொன்றில் உள்ளார்ந்த கணினி அனைத்தையும் ஒன்றிணைத்து தகவல் பரிமாறும் செய்தித் தொகுதி
2) செய்மதிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்
3) சில நிறுவனங்கள் ஒன்றிணைந்து தயாரிக்கும் கணினித் தொகுதி.
4) செயம்தி, தொலைபேசி, டேலர் இயந்திரத்தினைப்பயன்டுத்தி வங்கி நடவடிக்கைகளில் ஈடுவடுவது.
5) மிகவிரைவாக எழுத்துருவான தகவல்களைப் பரிமாறிக் கொள்வது (............)

**32.** இலங்கையின் முருகைக்கற்பார் சுற்றுலா மையங்களான **ஹிக்கடுவ, பாசிக்குடா** காணப்படும் மாவட்டங்கள் முறையே
1) காலி, மட்டக்களப்பு
2) மாத்தறை, அம்பாந்தோட்டை
3) களுத்துறை, அம்பாறை
4) திருகோணமலை,
5) கொழும்பு,காலி. மாத்தறை (............)


M.SUJINTHAN

**33.** ஐரோப்பிய நாடுகளில், நகரமயமாக்கத்தின் ஆரம்பத்திற்கான **முதலாவது** முன் தேவையாகக் கருதப்பட்டது யாது?
1)உள்ளூர் அரசாங்க முறைமையொன்றின் உருவாக்கம்
2)கலானிகளின் உருவாக்கம்
3)கிராமியத் துறையில் விவசாயம் சார்ந்த மிகை உற்பத்தி
4)நாட்டின் நிலவுடமையினைத் தனியார் மயமாக்கல்
5)பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (............)

**34.** உலகில் **கோதுமை உற்பத்தியில்** முன்னணி வகிக்கும் நாடுகளை ஒழுங்கு முறையில் கொண்டது?
1) சீனா, இந்தியா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா
2) சீனா, ரஷ்யா, கனடா, இந்தியா
3) சீனா, இந்தியா, ரஷ்யா, கனடா
4) சீனா, ஐக்கிய அமெரிக்கா, கனடா. பிரான்ஸ்
5) சீனா, இந்தியா. ரஷ்யா. ஐக்கிய அமெரிக்கா (............)

**35. பேரேரிப் பிரதேசம், குஸ்நெட்ஸ் வலயம், பர்மிங்ஹாம், சுஷாங்ஷி** ஆகிய இரும்புத்தாது வயல்கள் பரம்பியுள்ள நாடுகளை சரியாக தருவது
1) ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ஐப்பான்
2) ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா
3) ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, சீனா
4) ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, சீனா
5) ரஷ்யா, சீனா, இங்கிலாந்து, ஐப்பான் (............)

**36.** இலங்கையில் நிலப் பகுதியைப் பொறுத்தவரை முறையே பெரியதும் சிறியதுமான இரண்டு மாவட்டங்களைக் காட்டும் சரியான விடை?
1) அம்பாறை மற்றும் கொழும்பு
2) பொலன்னறுவை மற்றும் கம்பஹா
3) மொனறாகலை மற்றும் காலி
4) அனுராதபுரம் மற்றும் கொழும்பு
5) அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் (............)

**37.** இலங்கையில் **சீனிக் கைத்தொழிற்சாலை** அமைந்துள்ள இடமாகக் காணப்படுவது?
1) பெல்வத்தை 2) புத்தளம் 3) புல்மோட்டை
4) வாழைச்சேனை 5) அம்பாந்தோட்டை (............)

**38.** பூகோள மயமாதலின் பிரதான **மூலகங்களில்** ஒன்றாக அமைவது?
1) தகவல் தொடர்பாடல் 4) கல்வி நடவடிக்கை
2) போக்குவரத்து 5) வர்த்தகம்
6) கைத்தொழில் செயற்பாடு (............)

**39.** "மெஸ்ட்ரிச் உடன்படிக்கை" என்பதனூடாக உருவாக்கப்பட்ட பிராந்திய அமைப்பு
3) சார்க் 4) ஐரோப்பிய ஒன்றியம்
4) ஆசியான் 5) பிம்ஸ்ரெக்
5) ஆபிரிக்க பொருளாதார ஆணைக்குழு (............)

**40**. சர்வதேச **தொலைத்தொடர்பு** மற்றும் **சமூக தகவல்** தினம் கொண்டாடப்படுவது எப்போது?
1) யூலை - 09 2) மார்ச் - 08 3)நவம்பர் - 03
4) ஏப்பிரல் - 22 5) மே – 17 (............)

M.SUJINTHAN

## பகுதி II

**1.** இலங்கை நில அளவைத் திணைகக் ளத்தினால் வெளியிடப்பட்ட ***1:50,000*** என்ற அளவுத்திட்டத்திலமைந்த மத்துகம இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தின் சமவுயரக்கோட்டு இடைவெளி ***20*** மீற்றர்களாகும். இப் படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> **குறிப்பு:** படத்தின் மேல் விடைகள் எழுதப்படலாகாது. விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும், உப பிரிவு இலகக்த்தினையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க வேண்டாம்.

***(i)*** படத்தில் *1 - 4* இனால் குறித்துக் காட்டப்படும் நிலவுருவங்களைப் பெரியடுக *(2 புள்ளிகள்)*

***(ii)*** படத்தில் B - C இனால் காட்டப்படும் பகுதியின் குறுக்குவெட்டு முகத்தை வரைக ? *(2 புள்ளிகள்)*

***(iii)*** படத்தில் ***D – E*** காட்டப்படும் சாய்வினைப் பெயரிடுக? *(1 புள்ளிகள்)*

***(iv)*** படத்தில் நாற்பக்கல் ***A*** இனால் காட்டப்படும் பகுதியின் நாற்பக்கலினை **1: 25, 000** என்னும் அளவுத்திட்டத்தில் வரைந்து நேர்கோட்டு அளவுத்திட்டத்தை வரைக? *(3 புள்ளிகள்)*

***(v)*** படப்பிரதேசத்தில் குடியிருப்பின் பரம்பலில் தாக்கம் செலுத்தியுள்ள மூன்று காரணிகளினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? *(4 புள்ளிகள்)*

***(vi)*** படப்பிரதேசத்தில் **பயிர்செய்கைக்கும் நீர்பாசன** நடவடிக்கைக்கும் இடையிலாலன தொடர்பினை ஆராய்க? *(4 புள்ளிகள்)*

***(vii)*** படப்பிரதேசத்தின் **வடிகாலமைப்புத்** தொடர்பாக ஆராய்க? *(4 புள்ளிகள்)*

**2.** அரசியல் எல்லைகளைக் காட்டும் உலகப்படமொன்று **(வரைபடம் *A*)** உமக்கு வழங்கப்பட்டுள்ளது. பொருத்தமான குறியீடுகள் மற்றும் நிறங்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

1) அல்ப்ஸ் மலைத்தொடர்
2) போர்ணியோ
3) குறோசிவா நீரோட்டம்
4) ஹட்சன் குடா
5) வெல்ட் புல்வெளி
6) கிழக்கு மேற்காக வரையப்படும் கற்பனைக் கோட்டில் **மிகப் பெரிய** கோடு?
7) யூரோ நாணயத்தை கட்டுப்படுத்தும் **ஐரோப்பிய வங்கி** நிறுவப்பட்டுள்ள நகரம்
8) கடந்த 2019 ஆம் ஆண்டில் **ஹகிபிஸ்** சூறாவளியினால் பாதிக்கப்பட்ட நாடு
9) சார்க் அமைப்பில் **புதிதாக** இணைவதற்கு விண்ணப்பித்துள்ள நாடு யாது?
10) **2022** இல் உலகக் கோப்பை கால்பந்து போட்டி நடை பெறவுள்ள நாடு?*(**10** புள்ளிகள்)*

M.SUJINTHAN

## பகுதி *III*

***3.***

(i) பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை ***(GPS)*** என்றால் என்ன? பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையின் அவதானிப்பு **நிலையங்கள்** இரண்டினைக் குறிப்பிடுக? (***4*** புள்ளிகள்)

(ii) பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையின் **அடிப்படை பிரிவுகளைக்** குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (***5*** புள்ளிகள்)

(iii) **“இன்றைய உலகில் பல்வேறு துறைகளின் வளர்ச்சியிலும் பூகோள இட நிலைப்படுத்தல் முறைமை *(GPS)* முக்கியத்துவம் பெறுகின்றது”** இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை உதாரணங்கள் மூலம் விளக்குக? (***6*** புள்ளிகள்)


***4.***

(i) தரவுகளில் பின்னகத்தரவுகள் என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்கி உதாரணங்கள் **இரண்டினை** குறிப்பிடுக? (***4*** புள்ளிகள்)

(ii) தரவுகளில் **மாறிகள், மாறிலிகள்** ஆகியவற்றிக்கிடையிலான வேறுபாட்டினை உதாரணத்துடன் விளக்குக? (***5*** புள்ளிகள்)

(iii) தரவு அட்டணை என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது? தரவு அட்டவணைப்படுத்தலின் வகைகள் **நான்கு** குறிப்பிடுக? (***6*** புள்ளிகள்)

***5.*** இலங்கையில் **பிறப்புக்கள், இறப்புக்கள்** மற்றும் **சிசுமரண** வீதங்களின் போக்குகள் **2006 – 2015** (தலா *1000* பேருக்கு) வரையான எண்ணிக்கையை கீழே உள்ள அட்டவணை இனங்காட்டி நிற்கின்றது.




***மூலம்: நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு – வருடாந்த அறிக்கை, இலங்கை***

(i) மேலே தரப்பட்ட வரைபடத்தின் **வகையினை** பெயரிடுக? (*2* புள்ளிகள்)

(ii) வரைபடத்தில் இலங்கையின் பிறப்புக்கள், இறப்புக்கள் மற்றும் சிசுமரண வீதங்களின் **முனைப்பான இரு அம்சங்களை** விவரிக்க? (*4* புள்ளிகள்)

(iii) மேலே தரப்பட்ட வரைபடத்தின் **இரு பயன்பாடுகளை** ஆராய்க? (*4* புள்ளிகள்)

(iv) இதே வகையான தகவல்களினை எடுத்துக் காட்டுவதற்கு மாற்றான வேறொரு படவரைகலையியல் முறையொன்றினை **படக்குறிப்பொன்றின்** மூலம் விவரிக்க. (*5* புள்ளிகள்)

**6. பாடசாலை ஒன்றில் தரம் 13 கற்கும் 30 மாணவர்களின் நிறைகள் கீழே தரப்பட்டுள்ளன**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 55 | 60 | 70 | 86 | 54 | 53 | 44 | 36 | 59 | 65 |
| 46 | 47 | 33 | 69 | 80 | 43 | 45 | 39 | 38 | 65 |
| 60 | 65 | 38 | 59 | 49 | 46 | 32 | 72 | 61 | 60 |

(i) அட்டவனை *1* இன் தரவினைப் பயன்படுத்தி கூட்டமாக்கப்பட்ட **மீடிறன் பரம்பல் அட்டவனை** ஒன்றைத் தயாரிக்குக? (*3* புள்ளிகள்)

(ii) தரவினைப் பயன்படுத்தி **இழைவரையம்** மற்றும் **மீடிறன் பல்கோணி** என்பவற்றை அமைக்குக? (*3* புள்ளிகள்)

(iii) சதவீத திரள் மீடிறனைக்கணித்து சதவீத **திரள் மீடிறன் வளையியை** வரைக? (*4* புள்ளிகள்)

(iv) கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பல் அட்டவனையைப் பயன்படுத்தி **உத்தேச இடை** யினைக் காண்க? (*5* புள்ளிகள்)

M.SUJINTHAN